தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-7-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## நேந்திரன் வாழைப் பழத்திற்கு நல்ல விலை கிடைக்கும்

உலகளவில் வாழை முன்னணி பழப் பயிராகும். பெரும்பாலான உற்பத்தியாளர்கள் சிறு விவசாயிகளாக உள்ளனர். உலகளவில் முக்கிய உற்பத்தி செய்யும் நாடுகளின் வரிசையில் இந்தியா, சீனா, பிலிப்பைன்ஸ், ஈக்குவேடார் மற்றும் பிரேசில் உள்ளன. 2011ல் உலகளவில் 5.15 மில்லியன் எக்டர் பரப்பிலிருந்து 106.54 மில்லியன் டன் வாழை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. சராசரி உற்பத்தித்திறன் ஒரு எக்டருக்கு 20.7 டன்களாகும்.

இந்தியா 2011 ல் உலக வாழை உற்பத்தியில் 27.8 சதவீதம் பங்களித்தது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவில் வாழையின் பரப்பு மற்றும் உற்பத்தி முறையே கணிசமான அளவு அதிகரித்துள்ளது. பரப்பு, 2005-06ல் 5.69 இலட்சம் எக்டரிலிருந்து, 2011-12ல் 8.16 இலட்சம் எக்டராகவும், உற்பத்தி 188.87 இலட்சம் டன்னிலிருந்து 296.67 இலட்சம் டன்களாகவும் மற்றும் உற்பத்தித்திறன் ஒரு எக்டருக்கு 33.1 டன்னிலிருந்து 36.3 டன்னாகவும் அதிகரித்துள்ளது. உலக ஏற்றுமதியில் இந்தியா 0.17 சதவீதம் பங்களிக்கிறது.

ஐக்கிய அரபுக் குடியரசு, சவுதி அரேபியா, ஓமன், பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு வாழைப்பழம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. G-9 மற்றும் ரோபஸ்டா இரகங்களுக்கு சர்வதேச அளவில் அதிகத் தேவை உள்ளது.

இந்தியாவில், தமிழ்நாடு வாழை உற்பத்தியில் முன்னணி வகிக்கிறது. (26.47 சதவீதம்), அதாவது 82.53 இலட்சம் டன் வாழை 1.25 இலட்சம் எக்டர் பரப்பளவில் இருந்து 2011-12ல் உற்பத்தி செய்யப்பட்டது. இரண்டாம் இடத்தில் மகாராஷ்டிரா (13.5 சதவீமும்) இதனைத் தொடர்ந்து குஜராத் (13.3 சதவீதம்) மாநிலம் உள்ளன. உற்பத்தித்திறனைப் பொறுத்த அளவில் தமிழ்நாடு முதல் இடத்தில் உள்ளது (65.8 டன் / எக்டர்). இதைத் தொடர்ந்து குஜராத் 61.5 டன் / எக்டர் மற்றும் மகாராஷ்டிரா 52.5 டன் / எக்டர் என்ற அளவில் உள்ளன.

தமிழ்நாட்டில் நேந்திரன் பயிரிடப்படும் முக்கிய வாழை இரகங்களில் ஒன்றாகும். கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சி மற்றும் கன்னியாகுமாரி மாவட்டங்களில் நேந்திரன் அதிகளவில் பயிரிடப்படுகிறது. நேந்திரன் முக்கியமாக சிப்ஸ் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. முக்கியமாக தமிழ்நாட்டிலிருந்து வரும் நேந்திரன் பழங்கள் கேரள மாநிலத்தில் அதிகமாக விரும்பப்படுகிறது. நேந்திரன் ஒரு தார்க்கு சராசரி 8 முதல் 12 கிலோ வரை எடையுள்ளது. ஏப்ரல்-மே மற்றும் அக்டோபர்- நவம்பர் ஆகிய மாதத்தில் நேந்திரன் நடவு செய்யப் படுகிறது. இந்த இரகம் காற்று சேதத்தை தாங்கி வளர்வதால் உயர் அடர்த்தி நடவுமுறை பின்பற்றப்படுகிறது.

அதிகமான வரத்துக்கள் ஜனவரி- பிப்ரவரியிலும் மற்றும் குறைந்த வரத்துக்கள் ஜுலை- ஆகஸ்டிலும் வருகின்றன. தற்போது சந்தை விலை கிலோ ஒன்றுக்கு ரூ.32 ஆகும். இவ்விலை தரம் மற்றும் இதரபண்புகளைப் பொறுத்து மாறுபடும். வரும் மாதங்களில் அறுவடை விலைகளை பற்றி விவசாயிகள் விழிப்புடன் செயல்பட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது, கோவையில் இயங்கி வரும் உழவர் சந்தையில் 10 வருடங்களாக நிலவிய நேந்திரன் விலைகளை ஆராய்ந்தது. இதன்படி கோயம்புத்தூர் உழவர் சந்தைகளில் 2013 ஆகஸ்ட் மாதத்தில் கிலோ ஒன்றுக்கு ரூ.31 முதல் 33 வரை கிடைக்கும், 2013 செப்டம்பரில் கிலோ ஒன்றுக்கு ரூ.34 முதல் 37 வரை கிடைக்கும். ஓணம் பண்டிகையை ஒட்டி செப்டம்பரில் நேந்திரன் விலை அந்த ஒரு வாரத்தில் மட்டும் அதிகமாகும். அதன் பின்னர் 2013 அக்டோபர் மாதத்தில் விலை வீழ்ச்சி அடைந்து கிலோ ஒன்றுக்கு ரூ.33 முதல் 35 வரை இருக்கும். விவசாயிகள் முகவர் மூலம் விற்கும்போது விலை முன்னறிவிப்புகளைவிட கிலோ ஒன்றுக்கு ரூ.1 முதல் 2 வரை குறைவாகக் கிடைக்கும்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:-</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி : 0422 -2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :-</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்
பழ பயிர்கள் துறை,
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி : 0422-6611269

மக்கள் தொடர்பு அலுவலர்